பொருளடக்கம்

✿

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 15

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 24

முன்னுரை / 29

அணிந்துரை / 39

அணிந்துரை / 48

பதிப்பகத்தாரின் முன்னுரை / 52

அறிமுகம் / 59

1 ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீ மற்றும் ஹிஸ்புத் தஹ்ரீரின் உருவாக்கம் / 69

- ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீயின் வரலாறு / 70
- அந்நபஹானீயின் தாத்தா / 71
- ஷெய்க் தகியுத்தீனிற்கும் ஸூஃபிஸத்திற்கும் தொடர்பில்லை / 74
- ஷெய்க் தகியுத்தீனின் ஆரம்பக்கட்டம் / 74
- அரசியல் ஈடுபாடு / 76
- இவர் பாத் கட்சியின் உறுப்பினரல்ல / 77
- ஷெய்க் தகியுத்தீனின் மூன்று முக்கிய ஆக்கங்கள் / 77
- இக்வானுல் முஸ்லிமினீன் உறுப்பினரல்ல / 78
- அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட ஹிஸ்புத் தஹ்ரீர் கட்சி / 80

2 ஒரு சமூகம் தனிநபரின் நடத்தையைக் கொண்டு தீர்மானிக்கப்படுவது இல்லை. மாறாக, அதன் ஆட்சியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. / 84

3 உண்மையில் கிலாஃபத் ஆட்சி முடிவுற்றது எப்போது? / 124

- அலீ கலீஃபா இல்லையா? / 126

- ஹஸன் ﷺ அவர்களும் கலீஃபாக்களில் ஒருவரா? / 128
- மன்னராட்சி தொடங்கியது எப்போது? / 130
- முதல் மன்னர் முஆவியா ﷺ அவர்கள் / 131
- முஆவியா ﷺ மன்னர்களில் சிறந்தவர் / 132
- பன்னிரண்டு கலீஃபாக்கள் பற்றிய சர்ச்சையும் விளக்கமும் / 135
- பன்னிரண்டு கலீஃபாக்கள் யார் யார்? / 141
- இமாம் குர்துபீ ﷺ அவர்களின் கருத்து / 143
- இமாம் இப்னு அபில் இஸ் அத்திமஷ்கியின் கருத்து / 145
- மன்னராட்சிக்கு எதிரான கருத்தைத் தெரிவித்த ஸஹாபாக்கள் / 146
- இமாம் இப்னுல் கய்யிம் ﷺ அவர்களின் கருத்து / 149
- கலீஃபா என்ற வார்த்தை முடியாட்சியையும் குறிக்கும் / 150
- தவறு செய்யும் ஆட்சியாளர்கள் பற்றிய முன்னறிவிப்பு / 153
- மக்களால் துண்டிக்கப்படும் முதல் பிணைப்பு எது? / 156
- ஹிஸ்புத் தஹ்ரீரின் வாதம் / 157
- உஸ்மானியர்களின் ஆட்சி கிலாஃபத் ஆட்சியா? / 158

4 மதச்சார்பின்மை உண்மையில் எப்போது தொடங்கியது? / 161

- உஸ்மானியப் பேரரசுடைய வீழ்ச்சியின் தொடக்கம் / 164
- துலிப் சகாப்தம் / 164
- உலமாக்களின் எதிர்ப்பு / 165
- தாழ்வு மனப்பான்மை - மதச்சார்பின்மையின் தொடக்கம் / 166
- குசுக் கைனார்கா ஒப்பந்தமும் உலமாக்களின் எதிர்ப்பும் / 167
- புதிய ஆணை எனும் பிரெஞ்சு மயமாக்கல் / 169
- இளம் உஸ்மானியர்கள் / 170
- முஸ்லிம்களிடத்தில் மேற்கத்திய கலாச்சாரம் / 171
- தன்சிமத் காலம் / 172

- சட்டத்திருத்தம் / 173
- உஸ்மானியம் / 173
- நிஜாமியே நீதிமன்றம் / 174
- கல்வியில் மேற்கத்தியமயமாக்கல் / 175
- ரஷ்டியஸ் தொடக்கப் பள்ளிகள் / 175
- இடாடிஸ் உயர்நிலைப் பள்ளி / 176
- வட்டிக்கு அனுமதி / 177
- வட்டிக்குக் கடன் கொடுக்கும் புனித அறக்கட்டளை / 179
- உஸ்மானிய வங்கியின் வட்டி / 181
- ஓரினச்சேர்க்கைக்கு அனுமதி / 181
- ஷெய்குல் இஸ்லாம் எனும் உயர்ந்த மார்க்க அறிஞர்களின் அதிகாரம் பறிக்கப்படல் / 183

5 கிலாஃபத் எப்படி அழிக்கப்பட்டது அல்லது 'ஏன்' கிலாஃபத் அழிக்கப்பட்டது? / 188

- உஸ்மானியப் பேரரசு ஏன் அழிந்தது? / 188
- துலிப் சகாப்தத்தினால் ஏற்பட்ட விளைவு / 189
- ஸெஃபிசத்தால் ஏற்பட்ட இணைவைப்புகள் / 189
- ஐரோப்பிய கல்வி முறைகளை ஏற்றுக்கொள்ளுதல் / 191
- வட்டியை அனுமதித்தல் / 191
- ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாபிற்கு எதிரான அவதூறு / 192
- ஆட்சியாளருக்குக் கட்டுப்படுதல் பற்றிய ஷெய்க் இப்னு அப்துல் வஹ்ஹாபின் நிலைப்பாடு / 193
- நஜ்து பகுதி உஸ்மானிய ஆளுகையின் கீழ் இருந்ததா? / 194
- நஜ்து பகுதியின் அன்றைய நிலைமை / 195
- ஷெய்க் இப்னு அப்துல் வஹ்ஹாப் பற்றிய ஸெஃபிகளின் பொய்கள் / 196
- நஜ்தின் வரலாறு / 198
- வஹ்ஹாபிய இயக்கம் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டதா? / 200

- வஹ்ஹாபிய இயக்கம்
  ஆங்கிலேயர்களுக்கு எதிரானது / 201
- முதல் சஊதி அரசு முறியடிக்கப்பட்டதற்கு
  ஆங்கிலேயர்கள் காட்டிய எதிர்வினை / 204

6 கிலாஃபத் இல்லாமல் இஸ்லாம் இல்லையா? / 213

7 முழு உலகமும் தாருல் குஃப்ரா? / 242

- இஸ்லாமிய நிலத்திற்கான வரையறைகள் / 243
- இஸ்லாமிய நிலத்திற்கான அடிப்படை தவ்ஹீதுதான் / 247
- ஷபா நாட்டின்மீது ஏற்பட்ட பிரச்சினை எதனால்? / 247
- இமாம் இப்னு தைமிய்யாவின் கூற்று / 248
- ஷாஃபி இமாமான அல்மாவர்தியின் கூற்று / 250
- இமாம் இப்னு தைமிய்யாவின் மார்தீன் ஃபத்வா / 253

8 மீண்டும் நுஸ்ரா? / 259

- தவ்ஹீதை நோக்கிய அழைப்புதான் நபியின் பணி / 262
- நபியின் செயலைவிட சொற்களைத்தான்
  முற்படுத்த வேண்டும் / 264
- நபிக்கு மட்டுமான பிரத்தியேக அம்சங்கள் / 267
- கெட்ட ஆட்சியாளரிடம் நடந்துகொள்ள
  வேண்டிய முறைகள் / 269
- ஆட்சியைத் தேடக்கூடாது / 278
- ஆட்சியதிகாரம் அல்லாஹ்வின் பரிசு / 280
- ஆட்சியாளர் செய்ய வேண்டிய முக்கியக் கடமைகள் / 282

9 ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்கள்
அனுமதிக்கப்படுகிறார்களா? / 290

- மறுப்பு / 295
- கடந்த கால வரலாறு நிரூபிக்கும் உண்மை / 298
- இமாம் இப்னு ஹஸ்மின் கருத்து / 298
- இமாம் இப்னு தைமிய்யாவின் கூற்று / 299
- இமாம் அல்மாவர்தியின் கூற்று / 300
- இமாம் இப்னு தைமிய்யா / 300

- தற்காலத்தில் உலகளாவிய கலீஃபா என்று தன்னை யார் கூறுகிறார்கள்? / 301
- சக்திக்கு மீறிச் சிரமம் இல்லை / 303
- உம்மத் ஒரு கலீஃபாவின் கீழ் ஒன்றுபட்ட வரலாறு / 304
- அபூ பஷீர் ﷺ அவர்களின் சம்பவம் / 306

10 இன்றைய ஆட்சியாளர்களின் நிலை என்ன? / 316

11 தவிர்க்க முடியாத கிலாஃபத் பற்றிய நிலைப்பாடு என்ன? / 355
- கிலாஃபத்தைக் கொண்டுவரும் பொறுப்பு யாருக்கானது? / 359
- அஹ்லுல் ஹல் வல் அக்த் என்போர் யார்? / 362
- ஆட்சியைப் பெற என்ன தேவை? / 368

12 ஹிஸ்புத் தஹ்ரீரும் அகீதா விசயங்களும் - 1 / 376
- அகீதா என்றால் என்ன? / 377
- அகீதாவின் அர்த்தம் / 378
- யாருடைய அகீதாவைப் பின்பற்ற வேண்டும்? / 379
- நபித்தோழர்களின் மேன்மை / 380
- நபித்தோழர்களின் அகீதாவைப் பின்பற்ற வேண்டும் / 381

13 ஹிஸ்புத் தஹ்ரீரும் அகீதா விசயங்களும் – 2 / 387
- ஹிஸ்புத் தஹ்ரீரின் பார்வையில் இஸ்லாமின் பாதுகாவலர்கள் யார் யார்? / 387
- யார் இந்த வாசில் இப்னு அதா? / 388
- யார் இந்த ஜஹ்ம் இப்னு ஸஃப்வான்? / 390
- யார் இந்தக் கைலான் அத்திமஷ்கி? / 394
- கைலான் அத்திமஷ்கியின் சில சம்பவங்கள் / 396
- ஹிஸ்புத் தஹ்ரீரின் ஈமானின் வரையறை / 402
- ஈமானில் செயலும் அடங்குமா? / 402

14 ஹிஸ்புத் தஹ்ரீரும் அகீதா விசயங்களும் – 3 / 407
- அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகள் பற்றிய ஹிஸ்புத் தஹ்ரீரின் நிலைப்பாடு / 407
- ஹிஸ்புத் தஹ்ரீர் - ஹதீஸுல் ஆஹாதிலிருந்து அகீதாவை எடுத்தல் / 418

- மண்ணறை தண்டனையை மறுக்கும் ஹிஸ்புத் தஹ்ரீர் / 431
- கப்ரு வேதனைக்கான ஆதாரம் / 436
- ஹஸ்புத் தஹ்ரீரும் அகீதாவும் பகுதியின் சுருக்கமான முடிவுரை / 440

15 ஹிஸ்புத் தஹ்ரீரும் மஹ்தீயும் / 444

- மஹ்தீ பற்றிய ஹதீஸ்கள் முத்தவாத்திரானவை / 450
- இப்னு கல்தூனின் நிலைப்பாடும் அதற்கான மறுப்பும் / 451

16 பரந்த இஸ்லாமிய அரசியல் பற்றிய உலகக்கண்ணோட்டம் மற்றும் இஸ்லாமில் அதன் தீங்குகள் / 479

- அரசியல் பார்வையின் விபரீதங்கள் / 483
- மார்க்ஸியத்தில் ஏற்பட்ட தவறான கொள்கை / 484
- வாழ்க்கைக்கான மூன்று நிலைகள் / 486
- தீனை நிலைநாட்டுதல் என்றால் என்ன? / 501
- லா இலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தையின் பெருமதிப்பு / 513
- அதான் பற்றிய நிலைப்பாடு / 515
- வெளி எதிரியைவிட உள் எதிரி ஆபத்தானவன் / 519
- கவாரிஜ்கள் ஆபத்தானவர்கள் / 520
- ஈரானிய புரட்சி இஸ்லாமியப் புரட்சியா? / 521
- அகீதாவைக் கண்டுகொள்ளாத ஹிஸ்புத் தஹ்ரீர் / 521
- ஷீஆக்களின் இணைவைப்பு / 523
- ஆட்சியில் ஷீஆக்கள் செய்த துரோகம் / 530

17 ஹிஸ்புத் தஹ்ரீரின் முன்னாள் உறுப்பினர்கள் கூறுவது என்ன? / 541

- ஹிஸ்புத் தஹ்ரீர் குர்ஆன்மீது போதுமான கவனம் எடுக்கவில்லை / 543
- முஸ்லிம்களின் அன்றாட பிரச்சினைகளில் கவனமெடுப்பதில்லை / 544
- வர்க்கவெறி / 546

முடிவுரை / 562

அறிமுகம்

❀

1924ம் ஆண்டு உஸ்மானியப் பேரரசு வீழ்ந்தது. அன்றிலிருந்து முஸ்லிம் சமூதாயம் மிகவும் இக்கட்டான நிலையை வரலாற்றில் சந்தித்து வருகிறது. முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக ஒற்றுமைப்படுத்தி, அவர்களை வலிமை வாய்ந்தவர்களாக்கிய கடைசி அடையாளமாக உஸ்மானியப் பேரரசு திகழ்ந்தது. உஸ்மானியப் பேரரசு வீழ்ந்ததினால் ஏற்பட்ட பின்விளைவின் காரணமாக 'கிலாஃபத் முறையை மீண்டும் கொண்டு வரவேண்டும்' என்று ஏராளமான இஸ்லாமிய இயக்கங்கள் உருவாகின. இந்த உன்னத இலக்கை அடைவதற்கான சரியான வழிமுறைகள் எது என்பது குறித்து ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் முஸ்லிம்கள் பிளவுபட்டுள்ளனர். இஸ்லாமிய மறுமலர்ச்சியை நோக்கிய குழப்பமான மற்றும் சற்றே முரண்பாடான பிரச்சாரங்களைப் பல இயக்கங்கள் செய்கின்றன. இத்தகைய விசயங்களை வலியிறுத்தி எழுதப்படும் பிரசுரங்கள் மக்களால் வாசிக்கப்படுகின்றன. இதுபற்றி பேசப்படும் உரைகளும் மக்களால் கேட்கப்படுகின்றன. ஒருபுறம், 'இஸ்லாமிய' இயக்கங்கள் என்று அழைக்கப்படும், அல்இக்வானுல் முஸ்லிமூன் (முஸ்லிம் சகோதரர்களின் சங்கம் என்று பொருள்), மற்றும் ஹிஸ்புத் தஹ்ரீர் (தி லிபரேஷன் பார்ட்டி - விடுதலைக் கட்சி என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) ஆகிய இரண்டு இயக்கங்களும், 'கிலாஃபத் இல்லாமல் இஸ்லாமை முழுமையாக வெளிப்படுத்த முடியாது. அதனால், கிலாஃபத் இஸ்லாமின் முடிவாக மாறுகிறது. ஆனால், அது மறுமை வெற்றிக்கான முதல் வழிமுறை அல்ல' என்று ஒப்புக்கொள்கிறது. மறுபுறம், உண்மையான மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு இஸ்லாமின் அடிப்படைகளாக இருக்கும் அகீதாவில் உண்மையான மாற்றம் நிகழ வேண்டும் என்றும், இஸ்லாமின் இருப்பு ஒரு கலீஃபாவைச் சார்ந்தது அல்ல என்றும், கலீஃபா இஸ்லாமைப்

1

ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீ மற்றும் ஹிஸ்புத் தஹ்ரீரின் உருவாக்கம்

❀

ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீ பற்றிய நம்பகமான தகவல்கள் மிகக் குறைவு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கான காரணங்கள் மிகவும் வெளிப்படையானவை. இந்த இயக்கம் பெரும்பாலும் மறைமுகமாகச் செயல்பட்டு வருகிறது. அறபு வசந்தம் ஏற்படுகின்ற வரை ஹிஸ்புத் தஹ்ரீரின் முக்கியப் பிரமுகர்கள் சிலர் பயமின்றிப் பேட்டி கொடுத்தனர். (ஆனால், அதன் பிறகு பெரும்பாலும் இவர்கள் இரகசியமாகவே செயல்படுகின்றனர்.) ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீயைப் பற்றித் துல்லியமாக அறிய இரண்டு முக்கிய ஆதாரங்களும், சில சிறுசிறு ஆதாரப்பூர்வக் குறிப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன.

- முதலாவது ஆதாரம், ஹிஸ்புத் தஹ்ரீரின் முன்னாள் உறுப்பினர் ரிஸா பன்க்ர்ஸ்ட் (*Reza Pankhurst*), 2016இல் எழுதிய 'ஹிஸ்புத் தஹ்ரீர்: லிபரேஷன் கட்சியின் சொல்லப்படாத வரலாறு' என்ற புத்தகமாகும்.
- இரண்டாவது ஆதாரம், இந்த ஆராய்ச்சியின் உத்வேகங்களில் ஒன்றாகும். முன்பு குறிப்பிட்டது போல டாக்டர் மூசா இப்னு வஸ்ல் அஸ்ஸுலமீயின் முனைவர் பட்ட ஆய்வறிக்கைதான் அது.

ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீயைப் பற்றி ஆன்லைனில் ஆங்கில இணையதளங்கள் உள்ளன. இருப்பினும், நபஹானீ அவர்களைப் பற்றி மேற்கோள் காட்டுவதில் பெரும்பாலானவை நேர்மையான ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. ஆனால், நாம் மேலே கூறிய இந்த

இரண்டு ஆதாரங்களும் சிறந்த மற்றும் மிகவும் துல்லியமான உண்மைகளை வழங்குவதை நான் கண்டேன். ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி விவாதிக்கும்போது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்கக் கூடாது. அத்தகைய வரலாறுகள் எவ்விதப் பாரபட்சமுமின்றி உண்மையை அப்படியே முன்வைக்க வேண்டும். அதுதான் நீதியானது என்று நான் நம்புகிறேன். விமர்சனப் பகுப்பாய்வைப் பொறுத்தவரை, ஹிஸ்புத் தஹ்ரீரின் சித்தாந்தத்தை விமர்சிக்கும்போது அது பின்வரும் அத்தியாயங்களில் வரும்.

ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீயின் வரலாறு

1911இல் பிறந்த ஷெய்க் தகியுத்தீன் அந்நபஹானீ ஃபலஸ்தீனத்தின் ஹைஃபா மாவட்டத்தைச் சேர்ந்த இஜ்ஸிம் (إجزم) என்ற கிராமத்தில் ஓர் இஸ்லாமியப் பற்றுள்ள குடும்பத்தில் வளர்க்கப்பட்டார். அவரது குடும்பம் நப்ஹான் பழங்குடியினரிலிருந்து வந்தது (பனூ நப்ஹான்). பிறகு இவர்கள் வடஃபலஸ்தீனத்தில் குடியேறினார்கள். 1948இல் ஃபலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் நபஹானீ குடும்பங்கள் உட்பட இஜ்ஸிம் குடியிருப்பாளர்களும் அடங்குவர். தகியுத்தீன் அந்நபஹானீ தனது ஏழாவது வயதில் தொடங்கி பத்தாவது வயதில் புனிதக் குர்ஆனை மனப்பாடம் செய்துமுடித்தார். அவரது தந்தையான இப்றாஹீம் ஆரம்பத்தில் டமாஸ்கஸில் நீதிபதியாகப் பணிபுரிந்தார். பிறகு ஃபலஸ்தீனத்தில் இஸ்லாமியச் சட்ட ஆசிரியராகச் சேர்ந்தார். இவரது தாயார் தகியா ஹதீஸ்களை மனனம் செய்தவர்.

நபஹானீ குடும்பம் உஸ்மானியப் பேரரசிற்கு விசுவாசமாக இருந்தது. இது தகியுத்தீனின் தாய்வழி தாத்தாவான யூசுஃப் அந்நபஹானீயின் செயல்பாட்டில் வெளிப்பட்டது. இவர் பல உஸ்மானிய மாகாணங்களில் நீதிபதியாகப் பணியாற்றியதால் நன்கு அறியப்பட்ட மாநிலப் பிரமுகராக இருந்தார். மேலும், உஸ்மானியப் பேரரசு மற்றும் ஆளும் உஸ்மானியக் குடும்பத்தை ஆதரிக்கின்ற பல ஆக்கங்களை எழுதியுள்ளார். யூசுஃப் அந்நபஹானீ தனது பேரனான தகியுத்தீனை 1928இல் கெய்ரோவில் உள்ள அல்அஸ்ஹர் பல்கலைக்கழகம் மற்றும்

3

உண்மையில் கிலாஃபத் ஆட்சி முடிவுற்றது எப்போது?

❀

ஹிஸ்புத் தஹ்ரீரின் பிரச்சாரம் என்னவென்றால், 1924இல் உஸ்மானியப் பேரரசின் வீழ்ச்சியுடன் கிலாஃபத் முடிவடைந்தது. நபிகள் நாயகம் ﷺ அவர்களின் காலம்தொட்டு உஸ்மானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலம் வரையில் கலீஃபாக்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தனர். எவ்வாறாயினும், இஸ்லாமிய மார்க்கம் விரிவானது. மேலும், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் உண்மையில் தனது பணியைச் சரியாக நிறைவேற்றியுள்ளார்கள். எதிர்காலத்தில் என்னவெல்லாம் வரப்போகிறது என்று சமூகத்திற்கு முன்னறிவுப்புச் செய்துள்ளார்கள். ஆட்சி முறையும் அது கடந்து போகும் நிலைகளும் கூட அல்லாஹ்வினால் இறக்கிவைக்கப்பட்ட மறைவான அறிவிலிருந்து முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதுபற்றி ஏராளமான ஆதாரப்பூர்வச் செய்திகள் உள்ளன.

حَدَّثَنَا أَحْمَدُ بْنُ مَنِيعٍ ، قَالَ : حَدَّثَنَا سُرَيْجُ بْنُ النُّعْمَانِ ، قَالَ : حَدَّثَنَا حَشْرَجُ بْنُ نُبَاتَةَ ، عَنْ سَعِيدِ بْنِ جُمْهَانَ ، قَالَ : حَدَّثَنِي سَفِينَةُ قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : الْخِلَافَةُ فِي أُمَّتِي ثَلَاثُونَ سَنَةً، ثُمَّ مُلْكٌ بَعْدَ ذَلِكَ . ثُمَّ قَالَ لِي سَفِينَةُ : أَمْسِكْ خِلَافَةَ أَبِي بَكْرٍ وَخِلَافَةَ عُمَرَ وَخِلَافَةَ عُثْمَانَ، ثُمَّ قَالَ لِي : أَمْسِكْ خِلَافَةَ عَلِيٍّ. قَالَ : فَوَجَدْنَاهَا ثَلَاثِينَ سَنَةً. قَالَ سَعِيدٌ : فَقُلْتُ لَهُ : إِنَّ بَنِي أُمَيَّةَ يَزْعُمُونَ أَنَّ الْخِلَافَةَ فِيهِمْ. قَالَ : كَذَبُوا بَنُو الزَّرْقَاءِ، بَلْ هُمْ مُلُوكٌ مِنْ شَرِّ الْمُلُوكِ. وَفِي الْبَابِ عَنْ عُمَرَ وَعَلِيٍّ قَالَا : لَمْ يَعْهَدِ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي الْخِلَافَةِ شَيْئًا. وَهَذَا حَدِيثٌ

முஆவியாவைச் சந்தித்து சமாதானத்தைப் பரிந்துரைப்போம்' என்று கூறினார்கள். ஹஸன் அல்பஸ்ரி ﷺ அவர்கள் மேலும் கூறியதாவது: அபூ பக்ரா ﷺ அவர்கள் கூறியதாக நான் கேள்விப்பட்ட செய்தியில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

அபூ பக்ரா ﷺ அறிவிக்கிறார்: நபி ﷺ அவர்கள் மிம்பர் மேடையின்மீது (உரையாற்றியபடி) இருக்க ஹஸன் ﷺ அவர்கள் நபியவர்களின் பக்கவாட்டில் அமர்ந்திருந்தார்கள். நபி ﷺ அவர்கள் ஒரு முறை மக்களையும் மறு முறை ஹஸன் ﷺ அவர்களையும் நோக்கியபடி, 'இந்த என்னுடைய (மகளின்) மகன் மக்களின் தலைவராவார். முஸ்லிம்களின் இரண்டு குழுவினரிடையே இவர் மூலமாக அல்லாஹ் சமாதானத்தை ஏற்படுத் தவிருக்கிறான்' என்று சொல்ல கேட்டேன். (புகாரீ 6692)

மன்னராட்சி தொடங்கியது எப்போது?

ஹஸன் ﷺ அவர்கள் தமது கலீஃபா பதவியை இராஜினாமா செய்து முஆவியா ﷺ அவர்களிடம் ஒப்படைத்தபோது, ஆட்சி யின் உண்மையான நிலை ஒரு மன்னராட்சியாக மாறியது. மேலும், இந்த ஆட்சி வடிவம் சிலசில மாறுபாடுகளுடன் அந்தக் காலத்திலிருந்து தொடர்ந்து வந்திருக்கிறது. முஸ்னது அஹ்மதில் பதிவுசெய்யப்பட்ட பின்வரும் ஹதீஸ் இந்த விசயத்தை விளக்குகிறது. (இந்த ஹதீஸின் நம்பகத்தன்மை நன்றாக உள்ளது. இது ஹஸன் தரத்தில் அமைந்த ஹதீஸாகும்.) ஹுதைஃபா ﷺ இதை அறிவிக்கிறார்கள்.

حَدَّثَنَا سُلَيْمَانُ بْنُ دَاوُدَ الطَّيَالِسِيُّ ، حَدَّثَنِي دَاوُدُ بْنُ إِبْرَاهِيمَ الْوَاسِطِيُّ ، حَدَّثَنِي حَبِيبُ بْنُ سَالِمٍ ، عَنِ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ قَالَ : كُنَّا قُعُودًا فِي الْمَسْجِدِ مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَكَانَ بَشِيرٌ رَجُلًا يَكُفُّ حَدِيثَهُ، فَجَاءَ أَبُو ثَعْلَبَةَ الْخُشَنِيُّ، فَقَالَ : يَا بَشِيرُ بْنَ سَعْدٍ، أَتَحْفَظُ حَدِيثَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي الْأُمَرَاءِ ؟ فَقَالَ حُذَيْفَةُ : أَنَا أَحْفَظُ خُطْبَتَهُ، فَجَلَسَ أَبُو ثَعْلَبَةَ، فَقَالَ حُذَيْفَةُ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : تَكُونُ النُّبُوَّةُ فِيكُمْ مَا شَاءَ اللَّهُ أَنْ تَكُونَ، ثُمَّ يَرْفَعُهَا إِذَا شَاءَ أَنْ يَرْفَعَهَا، ثُمَّ تَكُونُ خِلَافَةٌ عَلَى مِنْهَاجِ النُّبُوَّةِ، فَتَكُونُ مَا شَاءَ اللَّهُ أَنْ تَكُونَ،

தெரிகிறது. அதேபோல் இன்று பல முஸ்லிம்கள் (சரியாகத்) தொழுகையை நிறைவேற்றுவதில்லை.

ஹிஸ்புத் தஹ்ரீரின் வாதம்

'கிலாஃபத் முடிந்தது எப்போது?' என்பது பற்றிய ஆய்வில் மேற்கூறிய அனைத்து விளக்கங்கள் மற்றும் அறிஞர்களின் கூற்றுகளுக்கு நேர்மாற்றமாக ஹிஸ்புத் தஹ்ரீரின் கூற்று அமைந்துள்ளது. 'கிலாஃபத் எவ்வாறு வீழ்த்தப்பட்டது? என்ற புத்தகத்தில் 'கொடிய அடி' *(The Fatal Blow)* என்ற தலைப்பில் பின்வரும் விளக்கங்களை அவர்கள் முன்வைக்கிறார்கள்.

> *'1924 மார்ச் மூன்றாம் நாள் காலையில், கிலாஃபத்தை ஒழிப் பதற்கும், ஆட்சி அதிகாரத்திலிருந்து மார்க்கத்தைப் பிரிப் பதற்கும் மாபெரும் தேசிய சட்டமன்றம் ஒப்புதல் அளித்துள் ளதாக அறிவிக்கப்பட்டது. அதே இரவில், முஸ்தஃபா கமால் இஸ்தான்புல் ஆளுநருக்கு ஓர் உத்தரவை அனுப்பினார். அதில் கலீஃபா அப்துல் மஜீத் மறுநாள் விடியும் முன் துருக் கியைவிட்டு வெளியேற வேண்டும் என்று நிபந்தனை விதித் தார். எனவே, அவர் போலீஸ் மற்றும் இராணுவத்தின் பாது காப்புடன் நள்ளிரவில் கலீஃபாவின் அரண்மனைக்குச் சென் றார். சில உடைகள் மற்றும் பணம் அடங்கிய சூட்கேஸ் அவருக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு அவர் வலுக்கட்டாய மாக வாகனத்தில் ஏற்றப்பட்டு நாட்டின் எல்லைக்கு அப்பால் உள்ள சுவிட்சர்லாந்திற்கு அழைத்துச் சென்று விடப்பட்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, முஸ்தஃபா கமால் அனைத்து இளவரசர்களையும் இளவரசிகளையும் நாட்டை விட்டு வெளியே அனுப்பினார். அனைத்து மத விழாக்களும் இரத்து செய்யப்பட்டது. முஸ்லிம்களின் அவ்காஃப் (நன்கொடைகள்) அரசின் சொத்தாக மாறியது. மேலும், மார்க்கத்தைப் போதிக் கும் பாடசாலைகள் அனைத்தும் கல்வி அமைச்சகத்தின் கீழ் அரசாங்கப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. (சல்லூம் 2000, பக். 185)*

உஸ்மானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு இஸ்லாமிய ஆட்சி முறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது என்பது உண்மைதான். இருந்தாலும், இஸ்லாமின் பிணைப்புகள் குறித்து கடைசியாக மேற்கோள் காட்டப்பட்ட ஹதீஸின்படி, உஸ்மானியப்

5

கிலாஃபத் எப்படி அழிக்கப்பட்டது அல்லது ‘ஏன்’ கிலாஃபத் அழிக்கப்பட்டது?

❀

ஹிஸ்புத் தஹ்ரீர், 1924இல் கிலாஃபத் ஆட்சி எப்படி முடிவுக்கு வந்தது என்பதை முஸ்லிம் மக்களுக்கு விளக்கி, அலசுகிறது. உஸ்மானியப் பேரரசை கிலாஃபத் என்று அழைப்பதில் உள்ள தவறை நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளேன். அதேபோல் உஸ்மானிய பேரரசு, ஒரு பரம்பரை முடியாட்சி என்பதையும் அதன் ஆட்சியின் பிற்பகுதியில் இஸ்லாமியச் சட்டத்திற்கு எதிரான சட்டங்களைச் சட்டமியற்றியது என்பதையும் முந்தைய அத்தியாயத்தில் விளக்கியுள்ளேன். ஹிஸ்புத் தஹ்ரீர் வழங்கிய இத்தகைய முழக்கங்கள் வரலாற்றை ஆய்வு செய்ய நேரம் எடுக்கும்போது சுவையாக இருக்காது. பொறுப்பற்றவர்கள் மற்றும் தற்போதைய நிலையில் விரக்தியடைந்த இளம் முஸ்லிம்களின் வெற்று உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காகவும் இத்தகைய முழக்கங்கள் பயன்படுகின்றன.

உஸ்மானியப் பேரரசு ஏன் அழிந்தது?

உண்மையில் உஸ்மானியப் பேரரசு ஏன் சரிந்தது என்பதைத்தான் நாம் அலசப்போகிறோம். ஏனெனில், அது எப்படி சரிந்தது என்பதை அலசுவது நமது நோக்கம் அல்ல. நான் கண்ணாடியைப் பார்த்து என்னை நானே கேட்கிறேன். உண்மையில் ஏன் வீழ்ச்சி ஏற்பட்டது? ஏன் அவமானம் ஏற்பட்டது? இந்தக் கேள்வியை நமக்குள் நாம் கேட்பதின் மூலம் நேர்மையாக இருக்க முடியும்.

ஏன் வீழ்ச்சி ஏற்பட்டது என்ற கேள்விக்கான பதிலை அல்லாஹ்வின் ஸுன்னாவை, அதாவது அவனுடைய வழியையும், அவனுடைய விதி எவ்வாறு செயல்படுகிறது

6

கிலாஃபத் இல்லாமல் இஸ்லாம் இல்லையா?

❀

ஹிஸ்புத் தஹ்ரீரின் சித்தாந்தம் 'கிலாஃபத் இல்லாமல் இஸ்லாம் இல்லை' என்ற கூற்றைச் சுற்றியே உள்ளது. இந்தப் பகுதி அவர்களின் புத்தகங்களில் ஒன்றான 'இஸ்லாமிய அரசு' என்பதிலிருந்து எடுக்கப்பட்டது.

'பல அரசுகளை நிறுவாமல், முழு முஸ்லிம் உலகிலும் ஒரே ஓர் அரசை நிறுவுவதே நமது முக்கியக் கடமை. அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமான சட்டத்தை உருவாக்கிக் கொண்டு இஸ்லாமிய ஆட்சி என்று பெயர் வைத்திருக்கும் அரசையோ, கொள்கை அடிப்படையிலான தலைமையின் மூலம் இஸ்லாமை கொண்டு செல்லாமல் இஸ்லாமியச் சட்டங்களைச் செயல்படுத்தி இஸ்லாமியம் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் அரசையோ நிறுவுவது நமது நோக்கமல்ல. இது போன்ற போலி-இஸ்லாமிய அரசுகளை நிறுவுவது நமது நோக்கமல்ல. மாறாக, இஸ்லாமிய அகீதாவின் அடிப்படையில் இஸ்லாமிய வாழ்க்கை முறையை மீண்டும் தொடங்கும் ஒரே ஒரு நாடு இருக்க வேண்டும். இஸ்லாமிய மார்க்கம் மக்களின் இதயங்களிலும் மனங்களிலும் ஆழமாக வேரூன்றிய பிறகு, இஸ்லாமின் செய்தியை உலகம் முழுவதற்கும் எடுத்துச் செல்வதற்கும் இஸ்லாமைச் சமூகத்திற்குள் நடைமுறைப்படுத்த வைப்பதற்கும் தஅவாவை மேற்கொள்ள வேண்டும்... எனவே, இஸ்லாமிய அரசை முஸ்லிம்கள் நிறுவ வேண்டும். ஏனெனில், இஸ்லாமிய அரசு இல்லாமல் இஸ்லாம் செல்வாக்குமிக்கதாக இருக்காது. ஒரு நிலம் அல்லாஹ்வின் கட்டளைக்கு உட்பட்டு ஆளப்படாவிட்டால் அந்த நிலம் தாருல் இஸ்லாமாக மாறாது.' *(அந்நபஹானீ 2002, பக்கம் 2-3)*

7

முழு உலகமும் தாருல் குஃப்ராஃ

❀

ஹிஸ்புத் தஹ்ரீரின் முக்கிய தூண்களில் ஒன்று, 'இன்றைய முஸ்லிம் நாடுகள் உட்பட முழு உலகமும் தாருல் குஃப்ராக இருக்கிறது' என்று கூறுவது. இது 'ஹிஸ்புத் தஹ்ரீரின் கருத்துகள்' என்ற அவர்களது புத்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டப்படுகிறது.

'ஒரு நிலம், அது அல்லாஹ்வால் வெளிப்படுத்தப்பட்ட இஸ்லாமியச் சட்டதிட்டங்களைப் பயன்படுத்தி ஆட்சி செய்கிறது. மேலும், அதன் பாதுகாப்பு இஸ்லாமின் பாதுகாப்பால் நிர்வகிக்கப்படுகிறது என்றால் அது இஸ்லாமின் நிலமாக (தாருல் இஸ்லாம்) கருதப்படுகிறது. அதன் பெரும்பான்மையான மக்கள் முஸ்லிமாக இருந்தாலும், முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் சரியே. அவை இஸ்லாமின் நிலமாகத்தான் கருதப்படும். இந்த இரண்டு விசயங்களும் நிறைவேற்றப்படாத நிலம் குஃப்ரின் (தாருல் குஃப்ர்) நிலமாகக் கருதப்படுகிறது. அதன் பெரும்பான்மையான மக்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரியே'

'... பெரும்பான்மையினராக இஸ்லாமியர்கள் இருந்தாலும் இஸ்லாமியச் சட்டத்தால் ஆளப்படாத சமூகம் இஸ்லாம் அல்லாத சமூகம். அதாவது, தாருல் குஃப்ர் (குஃப்ரின் நிலம்) ஆகும். இந்தச் சமுதாயத்தில் உள்ள தஅவா இஸ்லாமிய அரசை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்படுகிறது. அதில் இஸ்லாமை நடைமுறைப்படுத்த... (அந்நபஹானீ 2006, பக்: 30,68)

இத்தகைய கூற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது அவசியம். ஏனெனில், இந்தக் கூற்று மக்காவையும் மதீனாவையும் கூட இறைநிராகரிப்பின் நிலங்களாக அறிவிக்கிறது. இந்த வரையறையின்படி, கத்தார் அல்லது சஊதி அறேபியா

10

இன்றைய ஆட்சியாளர்களின் நிலை என்ன?

❀

ஹிஸ்புத் தஹ்ரீர் இன்றைய முஸ்லிம் ஆட்சியாளர்களைச் சட்டப்பூர்வமானவர்கள் என்று அங்கீகரிக்கவில்லை என்ற உண்மையை நாம் ஏற்கனவே நிறுவியுள்ளோம். கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், ஹிஸ்புத் தஹ்ரீர் தங்களின் கருத்துகளை நிரூபிக்க சில ஹதீஸைப் பயன்படுத்து கிறார்கள்.

அவர்கள் இரண்டு வாதத்தை முன்வைக்கிறார்கள்.

- முதலாவது ஆட்சியாளர் என்பவர் முழு முஸ்லிம் உலகத் தையும் ஆளும் ஒரே கலீஃபாவாக இருக்க வேண்டும். தற்காலத்திலுள்ளவர்கள் அவ்வாறு இல்லை. ஆகவே, அவர்கள் சட்டப்பூர்வமானவர்கள் அல்லர்.
- இரண்டாவது வாதம், இந்த ஆட்சியாளர்கள் இஸ்லாமியச் சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவ தில்லை. ஆகவே, அவர்கள் சட்டப்பூர்வமானவர்கள் அல்லர் என்பதாகும்.

ஹிஸ்புத் தஹ்ரீர் கூறும் காரணங்கள் இவை மட்டுமல்ல. இந்தத் தருணத்திற்கு இவை போதுமானவை.

முந்தைய அத்தியாயத்தில் முதல் வாதத்தையும் அதற்கான மறுப்பையும் பார்த்தோம். இஸ்லாமியச் சட்டங்களின்படி ஆட்சி செய்யாதது தொடர்பான இரண்டாவது காரணத்தை நாம் இப்போது அணுகுவோம். ஹிஸ்புத் தஹ்ரீரின் விளக்கத்துடன் ஹதீஸ்கள் வழங்கப்படும்.

حَدَّثَنَا دَاوُدُ بْنُ رُشَيْدٍ ، حَدَّثَنَا الْوَلِيدُ - يَعْنِي ابْنَ مُسْلِمٍ - حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ بْنُ يَزِيدَ بْنِ جَابِرٍ ، أَخْبَرَنِي مَوْلَى بَنِي فَزَارَةَ - وَهُوَ : رُزَيْقُ بْنُ حَيَّانَ - أَنَّهُ سَمِعَ مُسْلِمَ بْنَ